பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

13 08 2024 7 15

செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான உறுதிப்பாட்டை இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கம் உணர்த்துவதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
2. நாட்டின் 78-வது சுதந்திரதின விழா கொண்டாட்டங்களில் பஞ்சாயத்ராஜ் அமைப்புகளைச் சேர்ந்த 400 பிரதிநிதிகள் சிறப்ப ,விருந்தினர்களாக பங்கேற்கின்றனர்.
3. மருத்துவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதை தடுக்க மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும் என்று சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.
4. வஃக்ப் சட்டத்திருத்த மசோதா ஆய்வு செய்வதற்கான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் தலைவராக பிஜேபி உறுப்பினர் திரு ஜெகதாம்பிகா பால் நியமிக்கப்பட்டுள்ளார்.
5. ஸ்பெயினில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியவின் அங்கிதா ரெய்னா முன்னேறியுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

நாட்டுப்பற்றையும் 2047-க்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டுமென்ற உறுதிபாட்டை இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கம் உறுதிபடுத்துவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் மூவர்ணக்கொடி யாத்திரையை இன்று தொடங்கி வைத்து பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு நாட்டின் வளர்ச்சியில் பல்வேறு சாதனைகள் படைத்திருப்பதாகக் கூறினார்.

நாட்டின் ஒவ்வொரு குடிமகனும், குறிப்பாக ஒவ்வொரு இளைஞனும் நட்டின் வளர்ச்சிக்கான பங்களிப்பை உறுதி செய்து 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டுமென்று தெரிவித்தார்.

இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கத்தில் பங்கேற்று அனைவரும் தங்களது வீடுகளிலும், அலுவலகங்களிலுன் தேசியக்கொடியை ஏற்றி நாட்டுக்கு பெருமை சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் குஜராத் மாநில முதலமைச்சர் திரு பூபேந்திரபடேல் மற்றும் அம்மாநில அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

**[]<<<>>>[]**

நாட்டின் 78-வது சுதந்திரதின விழா கொண்டாட்டங்களில் பங்கேற்க பஞ்சாயத்ராஜ் அமைப்புகளைச் சேர்ந்த 400 பிரதிநிதகளுக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.,

தீலலி செங்கோட்டையில் நடைபெறும் இந்த விழாவில் இவர்கள் சிறப்பு விருந்திகனர்களாக கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பஞ்சாயத்துராஜ் அமைப்புகளின் மகளிரின் தலைமை பொறுப்புக்கான தேசிய பயிலரங்குக்கு பஞ்சாயத்துராஜ் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

புதுதில்லியில்நடைபெறும் இந்த பயிலரங்கில் பஞ்சாயத்துராஜ் அமைப்புகளில் மகளிர் சந்தித்து வரும் சவால்கள் மற்றும் அவர்களுக்கான வாய்ப்புகள் குறித்தும் வெற்றிகரமாக செயலாற்றி வரும் மகளிர் பஞ்சாயத்து தலைவர்கள் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளில் மகளிரின் பிரதிநிதித்துவத்தை உயர்த்துவதற்கான வழிவகைகள் குறிததும் இதில் விவாதிக்கப்பட உள்ளது.

மத்திய பஞ்சாயத்துராஜ் அமைச்சர் திரு ராஜீவ்ரஞ்ஜன் சிங், இணை அமைச்சர் பேராசிரியர் எஸ் பி சிங் பாஹேல் ஆகியோர் இந்த பயிலரங்கில் பஞ்சாயத்துராஜ் பிரதிநிதிகளிடையே உரையாற்றவுள்ளனர்.

இந்த பயிலரங்கையொட்டி கிராம பஞ்சாயத்துகளுக்கான இ-கிராம் ஸ்வராஜ் என்ற இணையதள சேவையும் தொடங்கி வைக்கப்பட உள்ளது.

22 அங்கீகரிக்கப்பட்ட இந்திய மொழிகளில் இதனை பயன்படுத்திக் கொள்ளலாம்.

**[]<<<>>>[]**

மருத்துவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதை தடுக்க மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும் என்று சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று போராட்டம் நடத்தி வரும் மேற்குவங்க மாநில மருத்துவர்களிடம் பேசிய அமைச்சர், கொல்கத்தாவில் மருத்துவர் கொலைக்கு காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

இனி வரும் காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாமல் இருக்க உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

மருத்துவர் கொலை தொடர்பான வழக்கை கொல்கத்தா உயர்நீதிமன்றம் சி பி ஐ விசாரிக்க வேண்டும் என்று எடுத்துள்ள முடிவை தாம் வரவேற்பதாக அவர் கூறினார்.

[]<<<>>>[]

தில்லி மதுபான கொள்கை முறைகேடு தொடர்பான சட்டவிரோத பண பரிவர்த்தனை வழக்கில் முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால், பாரதீய ராஷ்ட்டிர சமீதி கட்சியின் திருமதி கவிதா ஆகியோரின் நீதிமன்ற காவல் அடுத்த மாதம் இரண்டாம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு இன்று விசாரணைக்கு வந்தபோது இதற்கான உத்தரவை நீதிபதி பிறப்பித்தார்.

[]<<<>>>[]

உயர்கல்வி நிறுவனங்களில் தேசிய தரவரிசைப் பட்டியலில் சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகம் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளதாக அதன் இயக்குநர் திரு காமகோடி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒட்டுமொத்த தரவரிசையில் ஆறாவது ஆண்டாகவும், பொறியியல் பிரிவில் தொடர்ந்து

ஒன்பதாவது ஆண்டாகவும் சென்னை ஐ ஐ டி நாட்டிலேயே முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்து வருவதாகக் கூறினார்.

*(சவண்ட்பைட் - காமகோடி ) —54 செகண்ட்*

**[]<<<>>>[]**

வஃஃக்ப் சட்டத்திருத்த மசோதா-வுக்கான கூட்டுக்குழுவின் தலைவராக பிஜேபி உறுப்பினர் திரு ஜெகதாம்பிகா பால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான உத்தரவை மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா பிறப்பித்துள்ளார்.

இந்த மசோதாவை ஆய்வு செய்வதற்கு 31 உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நிறைவடைந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் இந்த மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு, கூட்டு நாடாளுமன்ற குழுவின் ஆய்வுக்காக அனுப்பப்பட்டது.

குழுவின் அறிக்கை நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**[]<<<>>>[]**

அனைத்து ஜனநாயக நடைமுறைகளுக்கும் இந்தியா ஆதரவு அளிக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெயசங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியா —அமெரிக்கா உறவுகள் குறித்து இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றிய அவர், அமெரிக்காவில் புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் அதிபருடன் இந்தியா இணைந்து செயல்படும் என்று கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளில் அமெரிக்காவில் உள்ள இந்தியர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் எச்-ஒன்-பி விசா குறித்த பிரச்சினை நீண்டகாலமாக தீர்வு காணப்படாமல் இருந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்திய வம்சாவளியினர் நம்பிக்கையுடன் செயல்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

வரும் ஐந்து ஆண்டுகள் உலகப்பொருளாதாரம் கடுமையான சூழ்நிலைகளை கடந்து வர வேண்டி இருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

உக்ரைன், மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பிரச்சினைகள் உள்ளிட்டவை சவாலாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

உலகளாவிய பயங்கரவாதத்தை முற்றிலும் களைவதற்கான இந்தியா – ஆஸ்திரேலியா கூட்டு செயற்குழுக் கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உலகளாவிய பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கான முயற்சிகளுக்கு இரு நாடுகளும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்தியாவும் - ஆஸ்திரேலியாவும் பயங்கரவாதத்தை எந்த வகையிலும் அனுமதிக்கக்கூடாது என வலியுறுத்தியுள்ளன.

பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கு ஒட்டுமொத்த மற்றும் நீடித்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது.

பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து பல்வேறு தகவல்களையும் இரு நாடுகளும் இக்கூட்டத்தில் பரிமாறிக் கொண்டன.

புதிய மற்றும் நவீன தொழில்நுட்பங்களை பயங்கரவாத அமைப்புகள் பயன்படுத்துவது குறித்தும், இணையதள சேவையை முறைகேடாக பயன்படுத்துவது குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது.

இரு நாடுகளும் இதை தடுப்பதற்கான ஆலோசனை பரிமாறிக் கொண்டன.

பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி உதவி அளிப்பதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்கு ஐ நா பாதுகாப்பு சபையில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டியது அவசியம் என இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஐ நா-வுக்கான இந்திய தூதர் திரு ஆர் ரவீந்திரா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தற்போது ஐ நா பாதுகாப்பு சபையில் அனைத்து நாடுகளுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை என்று கூறியுள்ளார்.

குறிப்பாக நிரந்தர உறுப்பினராவதற்கு பல நாடுகளுக்கு வாய்ப்புகள் தரப்படாதது குறித்தும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.,

ஐ நா பாதுகாப்பு சபையில் ஆப்ரிக்கா, லத்தின் அமெரிக்கா, ஆசிய பசிபிக் நாடுகளின் பிரதிநிதித்துவம் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

ஸ்பெயினில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியவின் அங்கிதா ரெய்னா முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-7, 7-6, 6-3 என்ற செட் கணக்கில் இங்கிலாந்தின் **Amelia Rajecki**-ஐ வென்றார்.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற ஹாக்கி அணியின் இரண்டாவது குழுவினர் இன்று இன்று புதுதில்லி வந்தடைந்தனர்.

விமான நிலையத்தில் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஏராளமான விளையாட்டு ரசிகர்களும், பொதுமக்களும் அவர்களை வரவேற்றனர். ஹாக்கி அணியின் முதல் குழுவினர் கடந்த சனிக்கிழமை புதுதில்லி வந்தனர்.